மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட ஒரு யோசனை அரசின் பரிசிலனையில் இருக்கிறது. புதிய பொட்டலமாக 'பாக்' செய்து விற்கலாம் என்றாலும் அளவு அப் போதும் குறையத்தான் செயயும். அதிலே ஏற்படும் நஷ்டத்தை யார் ஏற்றுக் கொள்வது என்ற நிலையிலே அரசாங்கம் அதுபற்றிப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

ஓசூர் கால்நடைப் பண்ணை

* 318 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூர் கால்நடைப் பண்ணையில், திவனம் வாங்கிய விஷயத்தில் ஏற்பட்ட மோசடியின் காரணமாக, எந்தெந்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசு கீழ்க்கண்ட அதி காரிகள் மீது வழக்குத் தொடர ஆணை பிறப்பித்துள்ளது :—

(1) டாக்டர் ஐ. டி. மந்திரமூர்த்தி, முன்னாள் கால்நடை இயக்குநர், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை.

(2) டாக்டர் என். திருநாவுக்கரசு, முன்னாள் கண்காணிப்பா வர், கால்நடை ஆராய்ச்சி நிலையம். ஓசூர் விலங்கினப் பண்ணை.

(3) டாக்டர் சி. கோவிந்தன், முன்னாள் பண்ணை மேலாளர், கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஓசூர் விலங்கினப் பண்ணை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தத் திவனம் வாங்கிய விஷயத்தில் ஏற்பட்ட மோசடியின் விளைவாக எந்த அளவு பணத் தொகை மோசடி செய்யப்பட்டிருக்கிறது ? எந்தெந்த விதத்தில் மோசடி செய்திருக்கிறார்கள் ? அவர்கள் தப்பித்துக் கொள்ளுவ தற்காக முயற்சிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வழக்கு, நீதிமன்றத்தில் இருக்கும் காரணத்தால் உப கேள்விகளுக்குப் பதில் சொல்ல இய லாத நிலையில் இருக்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister the present stage of enquiry about this fraud case ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வழக்கு, நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னேன்.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state the nature of the fraud perpetrated by these officials ? I think this will not be *sub judice*, Sir.

1970 மார்ச் 11]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குற்றம் எத்தகையது என்பதைத்தான் கேட்டிருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. மேற்கொண்டு இந்த நேரத்தில், வழக்கு விசாரணையில் இருக்கின்ற நேரத்தில் எந்த விவரத்தையும் அரசாங்கத் தரப்பில் வெளியிடுவது சரியல்ல என்ற காரணத்தால் பதில் சொல்ல மறுக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வழக்கு மன்றத்தில் இருப்பதால் அதனுடைய உள் விஷயத்தைக் கேட்க வரவில்லை. மோசடி எந்த அளவுக்கு, எவ்வளவு மோசடி ஏற்பட்டது என்பதைத் கூறினால் அது வழக்கைப் பாதிக்காது. எவ்வளவு தொகை மோசடி செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைக் கூடச் சொல்லுவதற்கு அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

மதுராந்தகம் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு மாவு ஆலை

* 319 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு (குச்சி கிழங்கு) மாவு தயாரிக்கக் கூட்டுறவு ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : மதுராந்தகம் பகுதியில் குச்சி கிழங்கு அதிகமாகப் பயிராவதாலும், அதை விற்க மார்க்கட் இல்லாததாலும் இப்பேர்ப்பட்ட ஆலையைக் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியாருக்குச் சலுகை கொடுத்தோ அரசு ஏற்படுத்துவதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபோன்ற கூட்டுறவு ஆலையை அமைக்க சேலத்தில் ஐயாயிரம் ரூபாய் முதலும், 76,200 ரூபாய் கடனும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு உற்பத்திக்காகவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலும் இது போன்ற ஆலையை அமைக்க தனியார் முன்வந்தால் இதுபோன்ற உதவிகள் செய்யப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன. ரொட்டி செய்யும்போது இந்த மாவைக் கலப்படம் செய்து உபயோகித்துவிடுகிறார்கள். இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?